ஏறாவூர் நகர சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர் நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 10(1) இன் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஏறாவூர் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஏறாவூர் நகர சபையின செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	மீளாய்வாண்டில் செலவு மேற்கொள்ளப்படாத நிர்மாண வேலைகள் மற்றும் கொள்வனவு இடம்பெறாத நூல் நிலையப் புத்தகங்கள், பொதுப்பயன்பாடு மற்றும் பொறியும் இயந்திரங்கள் கூட்டுமொத்தம் ரூபா 8,157,776 சொத்துக்கள் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.	2025ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கைகளில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இனங்காணப்பட்ட சொத்துக்கள் மாத்திரம் கணக்குகளில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	ரூபா 335,234 ஆன புத்தகங்களும் மற்றும் விலை குறிப்பிடப்படாத 301 புத்தகங்களின் பெறுமதிகளும் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	சொத்துக்களை கணக்குகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டில் நீதிமன்ற தீர்ப்பொன்றின் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 2,024,000 இனை நிவாரணங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குக்கான செலவுகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கைகளில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிகழத்தக்க சொத்துக்கள் குறிப்பாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 237,953,471 ஆன 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள் மற்றும் முற்பணப் பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்துப் பதிவேட்டில் பதியப்பட்டு இற்றைப்படுத்தப் பட்டு வருகின்றன.	சொத்துக்களின் ஆவணங்களை திரட்டி ஏடுகளில் பதிவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
			-	
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i)	371(5)	சபையில் 1988 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலும் முற்பண நிலுவைகளாக காணப்படுகின்ற ரூபா 378,386 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மரணமடைந்தவரின் பின்னுரித்தாளர் களிடமிருந்து முற்பணங்களை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	முற்பண கொடுப்பனவுகளை இனங்கண்டு அவற்றினை தீர்ப்பனவு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	571(1), (2) & (3)	இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 1,656,714 ஆன 13 வகையான வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	COPA நடவடிக்கை காரணமாக கட்டிட நிர்மாண வைப்புக்களை பேண வேண்டியுள்ளது. ஏனைய வைப்புக்களில் சில சீர்செய்யப்பட்டு வருகின்றது.	காலங்கடந்த வைப்பு வகைகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	2017 செப்தெம்பர் 15 ஆந் திகதிய கடித இலக்கம் EP/14/ACC/PE/Gen	ரூபா 250,000 இற்கு மேற்பட்ட வாகனத்திருத்தங்களுக்கான அனுமதியானது பிரதம செயலாளரிடமிருந்து பெறப்படாது, ரூபா 1,845,084 இற்கு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, இச்செலவில் 50 சதவீதமான ரூபா 923,000 இனை சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	சபைக்குரிய வாகனமானது மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு பெறுகை தீர்மானம் எடுக்கப்பட்டு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதம செயலாளரின் திருப்தி தொடர்பான அறிக்கை கிடைத்ததும் மிகுதித் தொகை செலுத்தப்படும்.	உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் அனுமதியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,746,006 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 6,849,118 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	பட்டியலிடப் பட்ட வருமானம்	சேகரிக்கப் பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரியும் வரியும்	16,140,820	14,158,638	16,939,984	19,426,283	13,393,510	37,471,865	15,228,233	22,243,632
வாடகை	8,264,600	6,701,290	6,322,590	6,043,120	13,510,800	11,530,679	5,876,910	5,653,769
உத்தரவுப் பத்திரக் கட்டணம்	5,670,000	5,022,170	4,932,170	234,000	11,074,000	5,521,180	5,407,180	114,000
ஏனைய வருமானம்	17,135,623	19,455,629	20,012,629	20,012,846	16,731,850	18,426,088	15,738,024	2,688,064
	-------------	------------	--------------	--------------	-------------	--------------	---------------	-------------
	47,211,043	45,337,727	48,207,590	45.716.249	54,710,160	72,949,812	42,250,347	30,699,465
	=========	=========	=========	=========	=========	=========	========]	=========

2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ) வீதவரியும் வரியும்		
(i) மீளாய்வாண்டு வரையான ஆதன வரி மற்றும் கழிவகற்றல் வரி நிலுவைகள் முறையே ரூபா 28,660,256 மற்றும் ரூபா 456,548 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்நிலுவைகளை செலுத்துமாறு உரியவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகின்றன.	ஆதனவரி நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான தமாஷா வரி நிலுவையான ரூபா 177,856 இனை கடந்த 10 வருடங்களாக அறவீடு செய்யப்பட்டாமல் காணப்பட்டிருந்தது.	குறித்த நபர் குடி பெயர்ந்து வெளிநாட்டில் வசித்து வருவதால் இந்நிலுவையினை அறவிடமுடியாமல் உள்ளது.	தமாஷா வரி நிலுவையினை உரியவரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) வாடகை		
அறவிடவேண்டிய கடை வாடகை மற்றும் சந்தைகளுக்கான குத்தகை வாடகை நிலுவைகள் முறையே ரூபா 567,312 மற்றும் 4,992,060 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	வாடகை நிலுவையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ) அனுமதிப் பத்திரக் கட்டணம்		
மீளாய்வாண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா 234,000 மற்றும் தொலைத்தொடர்பு கோபுரத்திற்கான வியாபார உரிமக் கட்டணமான ரூபா 75,000 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	- மேற்படி -	வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டண நிலுவைகளை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ) ஏனைய வருமானம்		
2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆடு மற்றும் மாடுகளின் தோல்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் நபர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 141,000 இனை 5 வருடங்களிற்கு மேலாக அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவையில் சிறு பகுதியினை செலுத்துவதாககுறித்த நபர் அறிவித்துள்ளார்.	நட்டம் ஏற்படாத வகையில் நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	1952 ஒக்தோபர் 03 ஆந் திகதியும் 10459 ஆம் இலக்கமும் கொண்ட வர்த்தமானி பத்திரிகை மூலம் A 1695 ஆம் இலக்க வரைபடத்தின் மூலம் ஏறாவூர் நகர சபையினால் சுவீகரிக்கப்பட்ட ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் கட்டடம் அமைந்துள்ள காணியினை முறையாக அந் நிறுவனத்தினத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது இக் காணியினை சட்ட நடவடிக்கை மூலம் மீட்பதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	உரிமக்கட்டணத்தை அறவிடுவதற்கோ அல்லது இக்காணியினை மீட்பதற்கோ முடியாமல் உள்ள போதிலும், இது தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2017 ஆம் ஆண்டில் பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவினால் (COPA) சுட்டிக்காட்டபப்பட்ட விடயங்களான அதிகாரமளிக்கப்படாத அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணம் மற்றும் கலாச்சார மண்டபம் வாடகைக்கு வழங்கியமை தொடர்பான பரிந்துரைகளினை கடந்த 07 வருட காலமாக நிவர்த்தி செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதம செயலாளரின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.	பாராளுமன்ற பொதுக் கணக்குக் குழுவினால் (COPA) சுட்டிக்காட்டபட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பழைய சந்தையிலுள்ள 33 கடைக்காரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 367,250 இனை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவைகளை செலுத்துமாறு வியாபாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருவதுடன், அதில் சிலர் நிலுவைகளை செலுத்தி வருகின்றனர்.	அறவிடப்பட வேண்டிய மின்சாரக் கட்டணத்தினை உரிய தரப்பினரிடமிருந்து அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	மின்சார சபைக்கு முற்பணமாக செலுத்திய ரூபா 786,122 அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	குறித்த நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	மின்சார சபைக்கு முற்பணமாக செலுத்திய தொகையினை அறவிட துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	ரூபா 125 மில்லியன் செலவில் நிர்மாணம் செய்யப்பட்ட 66 கடைத் தொகுதிகளைக் கொண்ட பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிட தொகுதியானது கடந்த 07 வருடங்களாக மூடப்பட்டுள்ளதுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மூலம்	விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் கடைகள் வாடகைக்கு வழங்கப்படும்.	சந்தைக் கட்டிட தொகுதியினை பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது

	குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது மாற்றுப்பயன்பாட்டிற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		மாற்றுப்பயன்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டின் போது திண்மக்கழிவு அகற்றுமிடத்தினை அமைப்பதற்காக ரூபா 08 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணியானது, கணக்காய்வு திகதி வரை குறித்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமையினால் விளைவற்று காணப்பட்டிருந்தது.	பொதுமக்கள் இவ்விடத்தில் குப்பைகளை கொட்டுவதற்கு பாரிய எதிர்ப்பை வெளியிடுகின்றமையினால் இதனை பயன்படுத்த முடியாமல் உள்ளது.	திண்மக்கழிவை அகற்றுவதற்கு காணியினை கொள்வனவு செய்வதற்கு முன்பு சாத்தியவள ஆய்வை மேற்கொள்வதற்கும், திண்மக் கழிவை சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	சபைக்கு சொந்தமான 09 வாகனங்கள் 10 வருட காலமாக பயன்படுத்த முடியாத வகையில் பழுதடைந்து காணப்பட்டிருந்தும் அவற்றினை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்களை விஷேட ஆய்வுச் சபை மூலம் கண்டறிந்து, விலை மதிப்பீட்டு சபை மூலம் அறிக்கை பெறப்பட்டு, அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.	வாகனங்கள் மற்றும் உழவு இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபைக்கு சொந்தமான பழுதுபார்த்து பயன்படுத்தக்கூடிய 07 வகையான வாகனங்களினை திருத்தம் செய்து இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மிக விரைவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	பழுதடைந்து காணப்படும் வாகனங்களினை திருத்தம் செய்து இயங்கு நிலைக்கு கொண்டுவர துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	சபையின் பழுதடைந்த ஜேசிபி இயந்திரமானது இயந்திர பொறியியலாளரின் மேற்பார்வை அறிக்கையின் கீழ் 2023 ஆம் ஆண்டு ரூபா 3,629,408 செலவில் திருத்தப்பட்ட போதிலும், தற்போது குறித்த ஜேசிபி இயந்திரமானது பயன்படுத்த முடியாமலுள்ளது. எனவே குறித்த திருத்தமானது முறையாக திருத்தம் செய்யப்படாமலும் மற்றும் முறையற்ற பராமரிப்பினாலும் ஏற்பட்டுள்ளதென, கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.	இதனை திருத்துவதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை ஈடுசெய்ய போதிய நிதி காணப்படாமையினால் அதனை திருத்த முடியாதுள்ளது.	பழுதடைந்து காணப்படும் ஜேசிபி இயந்திரத்தினை முறையாக திருத்தம் செய்து உரியவாறு பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் பெயரிலுள்ள 04 வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களின் உரிமையினை சுவீகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(உ)	சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 09 வாகனங்களினை மோட்டார் வாகன திணைக்களத்தில் பதிவு செய்து வாகன இலக்கங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பதிவுச்சான்றிதழினை வழங்குமாறு மோட்டார் வாகன திணைக்களத்திற்கு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.	சபையினால் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களினை பதிவு செய்து வாகன இலக்கங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சுகள்
(அ)	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, இரண்டாம் நிலை மட்டத்தில் 09 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	பதவி வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.	ஆளணி வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபையில் பணிபுரிந்து பதவி வறிதாக்கப்பட்ட பணியாளர் ஒருவரிடமிருந்தும் அறவிட வேண்டிய கடன் நிலுவையான ரூபா 52,800 கடந்த 10 வருடங்களுக்கு மேலாக அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த ஊழியரிடம் பலமுறை அறிவிக்கப்பட்ட போதிலும் நிலுவையினை வசூலிக்க முடியவில்லை. மேலும், இவ்விடயம் இணக்க சபைக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.	ஊழியர் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	சிபார்சு
2021 திசெம்பர் 24 ஆந் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல. DMA/01-2019(i) இன் பிரகாரம், தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 25 விடயங்கள தொடர்பில் உள்ளகக் கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வான ரினால் அவதானிக்கப்படு கின்ற பிழைகள் உடனுக்குடன் திருத்தம் செய்யப்படுவதுடன், எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் உட்படுத்தப்படும் சகல விடயங்களும் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும்.	உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல விடயங்கள் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வாள ரினால் கணக்காய்வு செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 சுற்றாடல் பிரச்சினை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	சிபார்சு
(அ)	1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும், 2008 இன் 01 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2022 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் ‘‘ஆ’’ பிரிவின் பிரகாரம் விலங்கறுமனை மற்றும் திண்மக் கழிவு நிலையத்திற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை.	விலங்கறுமனை மற்றும் திண்மக்கழிவு நிலையத்துக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	விலங்கறுமனை மற்றும் திண்மக்கழிவு நிலையத்துக்கான் அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	சபையின் நகர அதிகார எல்லையினுள் மாதாந்தம் அண்ணளவாக சேகரிக்கப்படும் 190,000 கிலோகிராம் உக்ககூடிய கழிவுகளை சேதனப் பசளை உற்பத்தி அல்லது மாற்று பயன்பாட்டிற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், மாதாந்தம் அண்ணளவாக சேகரிக்கப்படும் 260,000 கிலோகிராம் உக்கக்கூடிய மற்றும் உக்கமுடியாத கழிவுகளை சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்ககூடிய வகையில் கொட்டப்பட்டிருந்தன.	சேதனப் பசளை உற்பத்தி நிலைய பணிகள் நிறைவடைந்து அதற்குரிய இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டவுடன் உக்கக்கூடிய கழிவுகள் பசளையாக்கப்டும். ஏனைய கழிவுகள் ஆற்றில் கலக்காது தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு கொட்டப்படும்.	உக்ககூடிய கழிவுகளை சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கும், உக்கமுடியாத கழிவுகளை சுகாதாரத்திற்கு தீங்கு விளைவிக்காத வகையில் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.